# திறந்த அழைப்பு

**ஒரு நிகழ்த்துக் கலைச்செயல் திட்டத்திற்காக வயதான பெண்களைத் தேடுகிறோம், அவர்கள் அழிந்து விடும் அபாயத்தில் இருக்கும் மொழிகளைப் பேசுபவர்களாக இருக்க வேண்டும்.**

## Mothertongues / தாய் நாக்குகள்

தற்போது உலகில் பேசப்படும் ஏறக்குறைய 7000 மொழிகளில் பாதிக்கு மேற்பட்ட மொழிகள் அடுத்த நூற்றாண்டில் அழியும் அபாயம் உள்ளது.
Mothertongues / தாய் நாக்குகள் என்பது அழிந்து வரும் மொழிகளைப் பற்றி, அம்மொழிகளை அரிதாகப் பேசிவரும் நபர்களுடன் இணைந்து செய்யும் ஒரு செயல்பாட்டு நிகழ்த்துக்கலை ஆராய்ச்சித் திட்டமாகும்.

முதல் கட்டச் செயல்பாடாக **செப்டம்பர் / அக்டோபர் 2024 மாதங்களில் Gessnerallee Zurich-இல் என்ற இடத்தில் நடக்க இருக்கும் உறைவிட ஆராய்ச்சியில் (research residency)** பங்கேற்க பங்கேற்பாளர்களைத் தேடுகிறோம். ஆராய்ச்சியில் நாம் கேட்க விருப்புவது என்ன: ஒரு மொழியை இழப்பதால் வரும் இழப்புகள் என்னென்ன? மொழிபெயர்க்கவே முடியாதது என்னென்? நமது ஒத்திகைப் பயிற்சியில் மொழிகளைத் தனித்துவமாக்கும் அதன் வேறுபாடுகள், மொழிபெயர்ப்பில் வெளிப்படுத்த சாத்திமில்லாத உணர்வு வெளிப்பாடுகள் மற்றும் கூகுள் மொழிபெயர்ப்பு சாதனம் உதவியைத் தாண்டிய கூட்டான தகவல் தொடர்புச் சாத்தியங்கள் ஆகியவற்றை ஆராய இருக்கிறோம்.
நீண்ட கால அடிப்படையில் (அடுத்தடுத்த உறைவிட ஆராய்ச்சிகள், நிகழ்த்துக்கலை தயாரிப்புகள், சுற்றுப்பயணம், கலை மற்றும் உள்ளடக்கம் தொடர்பான ஒத்துழைப்புகள்) குழுவில் அங்கம் வகிக்கும் வாய்ப்பும் உள்ளது.

நிகழ்த்துக்கலை, நாடகம் சார்ந்த துறையில் முந்தைய அறிவு அல்லது அனுபவம் தேவை இல்லை. ஒருவேளை நீங்கள் தொழில் ரீதியாக நாடகம் மற்றும் நிகழ்த்துக்கலை துறைகளில் இயங்கினால் கூடுதல் சிறப்பு. பரஸ்பர மரியாதையும், கருத்து சொல்லும் உரிமையும் நமக்கு முக்கியம்.

### கலை இயக்குனர்

நாடக தயாரிப்பாளரும் இயக்குநருமான ரெபெக்கா பாங்கர்டரைச் சுற்றியுள்ள குழு, நாடக வெளியில் உள்ள மொழியியல், ஆவணக் காப்பகம் மற்றும் கதைசொல்லல் சார்ந்த அரசியலில் ஆர்வமாக உள்ளது, மேலும் இக்குழு கடினமான தலைப்புகளை எவ்வாறு ரசிக்கத்தக்க வகையிலும், விமர்சன மற்றும் கவித்துவமான வழியிலும் அணுகுவது என்ற கேள்வியில் பயணிக்க உள்ளது.

### தொடர்பு கொள்ள

நீங்கள் ஆர்வமாக இருந்தால், கேள்விகள் இருந்தால் அல்லது திட்டத்தைப் பற்றி கூடுதல் தகவல் பெற விரும்பினால், தயவுசெய்து உங்களைப் பற்றிய சில வரிகளில், சிறு அறிமுகத்தோடு செய்து எங்களை தொடர்பு கொள்ளவும்:
**mothertongues@outlook.com** அல்லது **0041 79 650 24 11**

### பொது நிபந்தனைகள்

உறைவிட ஆராய்ச்சி பங்கேற்புக்கு பணம் செலுத்தப்படும். ஜெர்மன் மொழி அறிவு தேவை இல்லை.
சைகைமொழிப் பேச்சாளர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
தேவையெனில் மொழிபெயர்ப்பாளரை வரவழைக்க முயற்சிக்கிறோம்.
சூரிக் / சுவிட்சர்லாந்திற்கு வெளியே வசிக்கும் ஆர்வமுள்ள தரப்பினரும் விண்ணப்பிக்க வரவேற்கப்படுகிறார்கள்.

நீங்கள் இத்திட்டம் பற்றிய செய்தியை ஆர்வமுள்ளவர்களுக்கு:
பகிர்ந்தால் அல்லது சாத்தியமான நபர்களுக்கு நேரடியாக அனுப்பினால் நாங்கள்
நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

scan for more languages >>>

scan for more languages >>>